

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.11.2023) சென்னை, ரிப்பன் மாளிகை, பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, மழைநீர் வெள்ள பாதிப்பு தொடர்பாக கட்டுப்பாட்டு மையத்தை தொடர்பு கொண்ட பொதுமக்களிடம் தொலைபேசி மூலம் உரையாடி அவர்களது கோரிக்கைகளை கேட்டறிந்து, அவற்றின் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இந்நிகழ்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, துணை மேயர் மு.மகேஷ் குமார், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே.பிரபாகர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ.ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### கடும் மழை பெய்த போதும்

# மழைநீர் வடிந்து விடுவதால் பொதுமக்கள் மகிழ்ச்சி!

## கள ஆய்வுக்குப் பின் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!

சென்னை,டிச.01-

சென்னையில் பெய்த பலத்த மழை காரணமாக சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்பட்ட பகுதிகளில் களப்பணிகளை பார்வையிட்டு மழைநீர் தேங்கியுள்ள பகுதிகளில் தேங்கியிருக்கும் மழைநீரினை அகற்றுவதற்கு துரித நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு மேற்கொண்டார்

அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்னையில் பெய்த பலத்த மழை காரணமாக சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்பட்ட நெருப்புமேடு, செட்டி தெரு, கோதாமேடு, பஜார் தெரு, மேற்கு ஜோன்ஸ் சாலை, ஈக்காட்டுத்தாங்கல், கங்கையம்மன் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் நேற்று (30.11.2023) களப்பணிகளை பார்வையிட்டு மழைநீர் தேங்கியுள்ள பகுதிகளில் தேங்கியிருக்கும் மழைநீரினை அகற்றுவதற்கு துரித நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தி ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது: சென்னையில் நேற்று காலை 6 மணி முதல் இன்று காலை 6 மணி முதல் 10 செ.மீ முதல் 25 செ.மீ அளவில் மழை பெய்திருக்கிறது. கடந்த 24 மணி நேரத்தில் மீனம்பாக்கத்தில் 25 செ.மீ அளவிற்கு மழை பெய்திருக்கிறது. பொதுவாகவே 5 செ.மீ மற்றும் 6 செ.மீ அளவிற்கு மழை பெய்தாலே மழை தேங்கி நிற்கும். முதலமைச்சர் அவர்கள் எடுத்த துரித நடவடிக்கைகளின் காரணமாக பெரிய அளவிலான மழைநீர் தேக்கம் என்பது எங்கும் இல்லை. ஓரிரு இடங்களில் சுமார் 25 செ.மீ அளவிற்கு மழை பெய்திருப்பதால் அரை மணி நேரம் மற்றும் ஒரு மணி நேரங்களில் மழைநீர் வடிந்து விட்டது.

மழைக்காலங்களில் எப்போதும் மழைநீர் தேங்கி நிற்கும் பகுதிகளான திருவள்ளுவர் தோட்டம், சுப்பிரமணிய சாலை, ஜெயராம் தெரு, கொத்தவால்சாவடி தெரு போன்ற பகுதிகளில் காலையில் இருந்து ஆய்வு மேற்கொண்டோம். இங்கு அனைத்து இடங்களிலும் மழைநீர் வடிந்து விட்டது. இதனால் பொது மக்கள் மிகப்பெரிய அளவில் மகிழ்ச்சி அடைந்து இருக்கிறார்கள். முன்பு எல்லாம் மழை வந்தாலே பயப்படும் நிலை மாறி மழை வந்தால் மகிழ்ச்சி அடையும் நிலை பொதுமக்களுக்கு தற்போது ஏற்பட்டிருக்கிறது.

முதலமைச்சர் அவர்கள் கடந்த வாரம் வரை கரையோரப் பகுதிகளில் ஆக்கிரமிப்பு செய்திருந்தவர்களை அகற்றி அவர்களுக்கு மாற்று இடம் வழங்கியிருந்தார்கள். எனவே செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து 2500 கன அடி நீர் திறந்தாலும் கரையோர மக்களுக்கு பாதிப்பில்லை. மழைநீர் எந்த வித தடங்கலுமின்றி ஆற்றில் சென்று கொண்டிருக்கிறது. தற்போது ஆற்றின் அகலம் அதிகப்படுத்தப்பட்டுள்ளது. எனவே 10,000 முதல் 15,000 கன அடி நீர் திறந்தாலும் பாதிப்பு ஏற்படாத நிலை உள்ளது.

2015 ஆம் ஆண்டு எவ்வித முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காமல் சுமார் ஒரு இலட்சம் கன அடி நீர் திறந்ததால்தான் பாதிப்புகள் அதிகமாக இருந்தது. தற்போது 1000 கன அடி மற்றும் 2000 கன அடி நீர் திறக்கின்றோம் என்று சொல்லிவிட்டுதான் நீர் திறக்கப்படுகிறது. மேலும் கடல் பகுதிகளில் உள்ள முகத்துவாரம் பெரிய அளவில் அகலப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் மழைநீரும் கடலுக்குள் எவ்வித் தடையும் இன்றி செல்வதற்கு வாய்ப்புகள் உள்ளது.

நேற்று மாலை மழை அதிகமாக பெய்ய ஆரம்பித்தவுடனேயே முதலமைச்சர் அவர்கள் மக்கள் பிரதிநிதிகள் களப்பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

அந்த வகையில் அமைச்சர்கள், மேயர், துணை மேயர், பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலக்குழுத்தலைவர்கள், நிலைக்குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் என மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் களப்பணிகளை மேற்கொண்டு வருகிறோம். மேலும் சுரங்கப்பாதைகளில் உள்ள மழைநீர் அகற்றப்பட்டு போக்குவரத்து ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

சென்னை சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதியைப் பொறுத்தவரை சுப்பிரமணிய சாலை, ஜோன்ஸ் சாலையில் உள்ள சுரங்கப்பாதைகளில் 5 செ.மீ மழைநீர் பெய்தாலே போக்குவரத்து பாதிப்பு ஏற்படும். எனவே தற்போது எவ்வித பாதிப்புகளும் இல்லாமல் போக்குவரத்து ஏற்பாடு தடையின்றி சென்றுக் கொண்டிருக்கிறது. தற்போது 296 மோட்டார் இயந்திரங்கள் சென்னை மாநகராட்சி சார்பாக தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கிறது. தற்போது இந்த அளவு மழை பெய்தும் கூட 40 மோட்டார் இயந்திரங்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 162 இடங்களில் நிவாரண மையங்கள் தயார் நிலையில் இருக்கின்றது.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.



மாதவரம் வடக்கு பகுதி 16 ,17 வட்டங்களுக்குட்பட்ட செட்டிமேடு, அரியலூர், கடப்பாக்கம் ஆகிய பகுதிகளில், மழை நீர் மற்றும் புழல் ஏரியில் இருந்து வெளியேறும் உபரி நீரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை, பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன், வட்டச் செயலாளர்கள் கே. கருணாகரன், மாவட்ட பிரதிநிதி நா. மோகன் குமார் நாகூர்,நீதி மற்றும் கழகத்தினர் பார்வையிட்டு, சென்னை மாநகராட்சி அதிகாரிகள் பணியாளர்களுடன் சேர்ந்து விரைந்து செயல்பட்டு நிவாரண பணிகளில் ஈடுபட்டு வந்த போது எடுத்த படம்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# பி.என். பெரியண்ணன்

**டிசம்பர் 1 (2009)**



தருமபுரி ஒருங்கிணைந்த மாவட்டக் கழகச் செயலாளராகவும், பின்னர் தருமபுரி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

பென்னாகரம் ஒன்றிய கவுன்சிலர், பென்னாகரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளில் திறம்படச் செயலாற்றியவர்.

“அடக்கமும், அமைதியும் வாய்ந்தவர். எதற்கும் அதிர்ந்து பேசமாட்டார். கழகத் தோழர்களிடம் அன்பாகப் பழகி அனைவரையும் கட்டுக்கோப்பாக வைத்திருந்தவர்” என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (30.11.2023) சென்னை, ரிப்பன் மாளிகையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில், கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரை வெளியேற்ற எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும், மேற்கொள்ளப்பட வேண்டிய மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்தும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, துணை மேயர் மு.மகேஷ் குமார், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே.பிரபாகர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ.ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பேரிடர் மேலாண்மைத் துறை இயக்குநர் எஸ்.ஏ.ராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் நிகழ்ச்சிகள் 100; ஜீன் 2023 முதல் நவம்பர் 2023 வரை 60 நிகழ்ச்சிகள் நிறைவு டிசம்பர் 2023மாத நிகழ்வுகள் 10!



## அமைச்சர் - மாவட்டச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

| வ.எண் | நிகழ்ச்சிகள் | நிகழ்ச்சி ஏற்பாடு | தலைமை | சிறப்பு அழைப்பாளர்கள் |
|---|---|---|---|---|
| 1. 05/12/23 06.00PM | தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண்-32,32A பாலக்கரை பகுதி | ந.தனக்கோடி எஸ்.சுரேஷ் | ஓசூர்.அப்துல் ரஹ்மான் பாரி தலைமைக் கழக பேச்சாளர் |
| 2. 08/12/23 10.00AM | திருநங்கைகள் - மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் கலைஞர் உருவம் பொறித்த ஆடைகள் வழங்கும் நிகழ்வு மற்றும் கருத்தரங்கம் | மாவட்ட, மாநகர மகளிர் தொண்டர் அணி | கே.கயல்விழி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ரம்யா பேகம் மாநகர அமைப்பாளர் | நாமக்கல் ப.இராணி மாநில அணி செயலாளர் கருத்தரங்கத்தில் உரையாற்றுபவர் நடிகர் எம்.எஸ்.பாஸ்கர் |
| 3. 10/12/23 06.00PM | தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண்-49,49A அரியமங்கலம் பகுதி | ஆ.ராஜேந்திரன் செபாஸ்டின் ஆரோக்கிய ராஜ் | சேப்பாக்கம் பிரபாகரன் தலைமைக் கழக பேச்சாளர் |
| 4. 11/12/23 06.00PM | தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் பொதுக் கூட்டம் | துவாக்குடிநகரம் | இ.காயாம்பு நகர செயலாளர் | அனிதா ராதாகிருஷ்ணன் மாவட்டக் கழக செயலாளர் தூத்துக்குடி தெற்கு மாவட்டம் |
| 5. 15/12/23 06.00PM | தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண்- 37,37A காட்டூர் பகுதி | ஆர்.விஸ்வநாதன் இரா.தவசீலன் | நந்தனம் நம்பிராஜன் தலைமைக் கழக பேச்சாளர் |
| 6. 22/12/23 06.00PM | தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் பொதுக்கூட்டம் | மலைக்கோட்டை பகுதி | மருந்துக்கடை ஆர்.மோகன் பகுதி செயலாளர் | பி.கே.சேகர் பாபு சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் |
| 7. 23/12/23 10.00AM | தலைவர் கலைஞர் சிலை திறப்பு விழா திருச்சி கிழக்கு தொகுதி | திருச்சி தெற்கு மாவட்டக் கழகம் | மாவட்டக் கழக செயலாளர் | கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் |
| 8. 24/12/23 10.00AM | வையம்பட்டி தெற்கு ஒன்றியம் 9 ஊராட்சிகளிலும் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா கல்வெட்டு திறந்து கழக கொடியேற்றும் விழா | வையம்பட்டி தெற்கு ஒன்றியம் | வி.ஏ.ராஜேந்திரன் ஒன்றிய செயலாளர் | மாவட்டக் கழக செயலாளர் மற்றும் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நூறாவது கொடிக்கம்பத்தை கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் விருதுநகர் தெற்கு மாவட்ட செயலாளர் அவர்கள் ஏற்றி வைப்பார் |
| 9. 27/12/23 06.00PM | தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண்-45,45A பொன்மலை பகுதி | மு.முருகானந்தம் பி.தமிழ்மணி | ஈரோடு.இறைவன் தலைமைக் கழக பேச்சாளர் |
| 10. 30/12/23 05.00PM | தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் கருத்தரங்கம் | தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் மாநில அணி செயலாளர்கள் | கே.என்.சேகரன் வண்ணை அரங்கநாதன் பி.எம்.சபியுல்லா என்.செந்தில் கவிஞர்.அ.சல்மா | தலைமை.நாஞ்சில் சம்பத் மதுக்கூர் ராமலிங்கம் கவிஞர்.சுகிர்தராணி |

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்
செயலாளர்
- திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.



ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட முகலிவாக்கம், கொளப்பாக்கம் ஆகிய பகுதிகளில் போரூர் ஏரி உபரிநீர் கால்வாயில் இருந்து வெளியேறும் மழை வெள்ள நீரை அகற்றும் பணிகளை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் சென்று பார்வையிட்டு பணிகளை துரிதப்படுத்தினார். உடன் மண்டல குழு தலைவர் என்.சந்திரன், பகுதி செயலாளர் பி.குணாளன், மாமன்ற உறுப்பினர் ஜெ.செல்வேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.